இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்


PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 148 | இதழ் : 14 | திகதி : 03.11.2024 | விலை : 50.00

# "Dilexit nos" 'அவர் நம்மை அன்புகூர்ந்தார்'
## திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் சுற்றுமடல்




2024 ஆம் ஆண்டு அக்டோபர் 24 அன்று இயேசுவின் திருஇருதயம் குறித்த 'Dilexit nos' என்ற நான்காவது சுற்றுமடலில் மொத்தம் 220 எண்களில் மனித மற்றும் இறைஅன்பில் இயேசுக்கிறிஸ்துவின் திருஇருதய அன்பு குறித்து எடுத்துரைத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நமக்குள் நாம் ஏற்படுத்திக் கொள்ளும் காயங்களை ஆற்றுவதற்கும், அன்பு மற்றும் பணியாற்றும் திறனை வலுப்படுத்துவதற்கும், இயேசுவினுடைய திருஇதயத்திலிருந்து வாழ்வளிக்கும் நீரின் ஆறுகள் நம் அனைவருக்குள்ளும் பாயவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். அக்டோபர் 24 ஆம் திகதி வெளியிடப்பட்ட நான்காவது சுற்றுமடலில் இவ்வாறு குறிப்பிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மொத்தம் 220 எண்களில் மனித மற்றும் இறைஅன்பில் இயேசுகிறிஸ்துவின் திருஇருதயஅன்பு குறித்து எடுத்துரைத்துள்ளார்.

2013ஆம் ஆண்டு 'Lumen fidei, 2015ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் அக்கறை குறித்த 'Laudato si' 2020ல் மனித உடன்பிறந்த நிலை குறித்த 'Fratelli tutti' என்ற மூன்று சுற்றுமடல்களை வெளியிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2024 ஆம் ஆண்டு அக்டோபர் 24 அன்று இயேசுவின் திருஇருதயம் குறித்த 'Dilexit nos' என்ற நான்காவது சுற்றுமடலை வெளியிட்டுள்ளார். அவர் நம்மை அன்பு கூர்ந்தார் என்னும் திருமடலானது இயேசு கிறிஸ்துவின் திரு இருதயமானது மனித மற்றும் இறைஅன்பின் பாரம்பரியத்தையும் தற்கால சிந்தனைகளையும் மீட்டெடுக்க அழைப்புவிடுக்கின்றது என்றும் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நம்பிக்கையில் மென்மை மற்றும் மகிழ்ச்சியை

ப.2

## புதிய திருத்தொண்டர்களாக ஐவர் திருநிலைப்படுத்தல்



யாழ்ப்பாணம் கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் அருட் சகோதரர்களுக்கான திருத்தொண்டர் திருநிலைப்படுத்தல் திருப்பணிகள் வழங்கல் மற்றும் குருத்துவ வேட்பாளராக ஏற்றுக்கொள்ளும் திருச்சடங்குகள் 19ஆம் திகதி நடைபெற்றன. கல்லூரி அதிபர் அருட்தந்தை தயாபரன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் புனித சவேரியார் உயர்குருத்துவக் கல்லூரிச் சிற்றாலயத்தில் நடைபெற்ற திருநிலைப்படுத்தல் திருச்சடங்குத் திருப்பலியில் யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த

ப.2

## இலங்கைக் கடற்படைக் கட்டளைத் தளபதி யாழ். ஆயர் சந்திப்பு



இலங்கைக் கடற்படைக் கட்டளைத் தளபதி Vice Admiral பிரியந்த பெரேரா அவர்கள் யாழ். மாவட்டத்திற்கு விஜயம் மேற் கொண்டிருந்த நிலையில் கடந்த 19ஆம் திகதி யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

## திருவுளப்பணியாளர் சபை முதல்வர் இலங்கை விஜயம்






திருவுளப்பணியாளர் சபை முதல்வர் அருட்தந்தை மார்க் ஆந்திரே அவர்கள் இலங்கை மற்றும் இந்நியாவிற்கு மேய்ப்புப் பணி விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில் கடந்த 20ஆம் திகதி இலங்கைக்கு வருகைதந்து பல்வேறு இடங்களிலுமுள்ள திருவுளப் பணியாளர் சபைப் பணித்தளங்களைத் தரிசித்தார் .

20ஆம் திகதி இலங்கை நாட்டை வந்தடைந்த இவர் அன்றைய தினம் கண்டி மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை வலன்ஸ் மெண்டிஸ் மற்றும் பதுளை மறைமாவட்ட ஆயர் பேரருட் தந்தை நிஸாந்த சில்வா ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் கண்டி திருவுளப்பணி பணியாளர் பெரிய குருமடத்தையும் தரிசித்தார். தொடர்ந்து 21ஆம் திகதி யாழிற்கு விஜயம் மேற் கொண்டு ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

தொடர்ந்து யாழ்ப்பாணம் திருவுளப்பணியாளர் சிறிய குருமடத்தைத் தரிசித்து அங்கு சபை அருட்தந்தையர்கள் மற்றும் குருமட மாணவர்களுடன் கலந்துரையாடிய அவர் 22ஆம் திகதி மன்னார் மறைமாவட்டத்திற்கு சென்று மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட்தந்தை இம்மானுவேல் பெர்னாண்டோ அவர்களைச் சந்தித்ததுடன்

ப.2

## கிளி. புனித திரேசாள் ஆலய அபிஷேகம்





அழகிய தோற்றத்துடன் கிளிநொச்சி நகரின் மத்தியில் அமைந்துள்ள புனித திரேசாள் ஆலயத்தின் அபிஷேகத் திருச்சடங்கு நிகழ்வு கடந்த 27ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை சில்வெஸ்ரர்தாஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் உதவிப் பங்குத்தந்தை அருட்தந்தை ராஜ் டிலக்சன் அவர்களின் உதவியுடன் இடம் பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் கலந்து ஆலயத்தை அபிஷேகம் செய்துவைத்துத் திருப்பலியைத் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். இந்நிகழ்வில் கிளிநொச்சி மறைக்கோட்ட

ப.2

## அமதிகளின் உயர் தலைவர் யாழ். விஜயம்



அமலமரித்தியாகிகளின் உயர் தலைவர் பேரருட்திரு. லூயிஸ் இக்னாசியோ றோயிஸ் அலன்சோ (சிச்சோ) அடிகளாரின் இலங்கைக்கான வருகையும் சந்திப்பும் ஒக்ரோபர் மாதம் 14 தொடக்கம் நவம்பர் 02 வரை அமைந்திருந்தது. பேரருட்திரு சிச்சோ அடிகளார் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த இவர். உயர் தலைவராகத் தேர்ந்தெடுக்கும்போது தென் சகாராப் பாலநிலப் பிரதேசத்தில் இஸ்லாமிய மக்களிடையே நற்செய்திப்பணி ஆற்றிக்கொண்டிருந்தார்.

இவர் ஏறக்குறைய இரண்டு கிழமைகள் இலங்கையில் தங்கியிருந்து இலங்கையில் உள்ள அ.ம.தி.களின்

ப.2

முதல்முறையாக வெளிவருகின்றது!

பிரதி 600/= மட்டுமே!

யாழ்ப்பாண மறைமாவட்டம் பாதுகாவலன் வெளியீடாக திருப்பாடல்களுடன் கூடிய திருவிவிலிய நாட்குறிப்பேட்டினை முதல்முறையாக யூபிலி ஆண்டில் வெளியிடவுள்ளது.

வீட்டிற்கோர் நாட்குறிப்பேட்டினை வாங்கி யூபிலி ஆண்டில் கிறிஸ்துவுடனான உறவில் வளர்வோம்.




பங்குத்தந்தையர் ஊடாக உங்கள் பிரதிகளை யாழ். புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

☎ 021 222 2378

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## இஸ்ரேல் இராணுவத்துக்கு ஏற்பட்ட கடும் மன அழுத்தமும் படிப்பினையும்

இஸ்ரேல் பலஸ்தீனப் போர் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக நடைபெற்று வரும் நிலையில் அங்கு இரண்டு நாள் போர் நிறுத்தம் ஒன்றுக்குரிய ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

பெருமளவு பலஸ்தீன மக்கள் கொல்லப்படுகிறார்கள் என்பது ஒரு புறம். மறுபுறம் பெருமளவு இஸ்ரேல் இராணுவத்தினருக்கு அந்தக் கொலைகளைப் பார்த்து அல்லது கொலை செய்தமையினால் பாரிய மன அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளன.

காஸாவில் போரில் ஈடுபட்டு மீண்டும் தாயகம் திரும்பிய பல இஸ்ரேலிய இராணுவ வீரர்களுக்கு PTSD எனப்படும் Post - Traumatic Stress Disorder என்ற அதிர்ச்சிக்குப் பிந்தைய அழுத்தக் குறைபாடு ஏற்பட்டுள்ளது.

இது பற்றிய விபரங்களை சி.என்.என் என்ற சர்வதேச செய்தி ஊடகம் விபரித்துள்ளது.

பலஸ்தீனத்துக்கு எதிரான போரில் கடந்த ஒரு வருடத்தில் மாத்திரம் 42,000 இற்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டனர்.

பலஸ்தீன சுகாதார அமைச்சின் தகவலின் பிரகாரம் இறந்தவர்களில் 30 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்று ஐக்கிய நாடுகள் சபை மதிப்பிட்டுள்ளது.

கடந்த மூன்று வாரங்களில் மாத்திரம் ஐந்து செய்தியாளர்கள் உட்பட ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். இப் பின்னணியில் எகிப்து ஜனாதிபதி அப்தல் பத்தா அல் சிசி போர் நிறுத்தத்துக்குப் பரிந்துரைத்துள்ளார்.

பொதுமக்கள் கொல்லப்பட்டமை இஸ்ரேலிய படைகளுக்கு ஏற்பட்டுள்ள மன அழுத்தங்கள் போன்ற பல காரணங்களை முன்வைத்துத் தற்காலிக அல்லது நிரந்தரப் போர் நிறுத்தம் ஒன்றுக்குரிய ஏற்பாடுகளை எகித்து ஜனாதிபதி மேற்கொண்டாலும் இஸ்ரேல் அரசு அதற்கு உடனடியாக இணங்கக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாகத் தெரியவில்லை.

ஏனெனில் பலஸ்தீன கமாஸ் அமைப்பு அழிக்கப்படும் வரை போர் தொடரும் என்று இஸ்ரேலிய பிரதமர் தொடர்ந்தும் மார்தட்டுகிறார். ஆனாலும் போரை நிறுத்த வேண்டுமென இஸ்ரேலுக்கு ஆதரவு கொடுத்து வரும் அமெரிக்கா போன்ற மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் கூட தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்றன.

இருந்தாலும் போர் நிறுத்த ஏற்பாட்டை அமெரிக்கா விரும்பவில்லை என்றே மத்திய கிழக்கு ஊடகங்கள் குற்றம் சுமத்துகின்றன. இப் பின்னணியில் தற்போது இஸ்ரேலியப் படையினருக்கு ஏற்பட்டுள்ள மன அழுத்தம் இஸ்ரேலிய மக்கள் மத்தியிலும் பெரும் குழப்பங்களை உருவாக்கியுள்ளன.

இப் போரில் பல குழந்தைகள் துப்பாக்கியால் நேரடியாகச் சுடப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருப்பதாகத் தற்போது தகவல்கள் கசிந்துள்ளன.

இவ்வாறான கொலைகளில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீண்டும் இஸ்ரேலுக்குத் திரும்பியதும் அது தொடர்பான அழுத்தம் இருக்கும். அது பற்றிய குற்ற உணர்ச்சி இருக்கும்.

குறிப்பாக பல இராணுவத்தினருக்குத் தூக்கம் இன்மை, கோபம், சாப்பிட, செயல்பட விருப்பம் இன்மை, கெட்ட கனவு போன்ற மன ரீதியான கடுமையான அழுத்தம் ஏற்பட்டு உள்ளது.

பலருக்குத் தற்கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டுள்ளதாக சி.என்.என் என்ற செய்தி நிறுவனம் கூறுகிறது.

அமெரிக்கா ஈராக்கில் மற்றும் ஆப்கானிஸ்தானில் போர் நடத்திய போதும் இப்படித்தான் அமெரிக்க இராணுவத்தினரும் கடும் மன அழுத்தங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

தற்போது இஸ்ரேல் இராணுவத்துக்கும் இதேபோன்ற நிலை ஏற்பட்டு உள்ளது.

ஆகவே போர் தீர்வல்ல என்பது இங்கே உணர்த்தப்பட்டிருக்கிறது. பலஸ்தீனம் இஸ்லாமியர்களின் பூமி என்பதை ஏற்று 'இரு அரசு' என்ற தீர்வுக்கு இஸ்ரேல் இணங்க வேண்டும். ஆயுதங்களை வழங்குவதால் ஏற்படக்கூடிய மனித அவலங்களை அமெரிக்கா இனிமேலாவது உணர வேண்டும்.

இது இஸ்ரேல் - அமெரிக்க நாடுகளுக்கு மாத்திரமல்ல உலகில் விடுதலை வேண்டிப் போராடும் அனைத்துத் தேசிய இனங்களையும் அடக்க முற்படும் அரசுகள் ஒவ்வொன்றுக்கும் பாரிய படிப்பினையாகும்

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

# இறந்த அனைத்து ஆன்மாக்களுக்கான திருத்தந்தையின் செபம்

இறந்த நமது சகோதர சகோதரிகள் இளைப்பாறும் இடமான கல்லறைக்கு நாம் செல்லும்போது இறந்து அடக்கம் செய்யப்பட்டு, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் மீதான நம்பிக்கையைப் புதுப்பிக்கிறோம் என்றும், நமது இறந்த உடல்கள் கடைசி நாளில் விழித்துக்கொள்கின்றன, இறைவனில் இளைப்பாறியவர்கள் இறப்பின் மீது வெற்றியுடன் இணைந்திருப்பார்கள் என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நவம்பர் 2ம் திகதி சனிக்கிழமை உரோமின் மூன்றாவது பெரிய கல்லறையான லௌரென்தினோ கல்லறைக்குச் சென்று திருப்பலி நிறைவேற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இறந்த அனைத்து ஆன்மாக்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காகத் திருப்பலியின் நிறைவில் இவ்வாறு செபித்தார்.

இறந்த நம் சகோதர சகோதரிகள் அனைவரும் இயேசுவோடு உயிர்த்தெழுவார்கள் என்ற உறுதியுடன், இறைத்தந்தையின் அருளையும் ஆசீரையும் நாடி ஒருமித்து நாம் அனைவரும் செபிப்போம் என்று கூறிய திருத்தந்தை அவர்கள், எல்லாம் வல்ல இறைவன் நமது அன்புக்குரியவர்களுக்கான இச்செபத்தினைத் தமது இரக்கமுள்ள கரங்களை விரித்து, தூய எருசலேமின் மகிமையில் ஏற்றுக்கொள்ளட்டும் என்றும் கூறினார்.

நமது ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் தந்தையாகிய இறைவன், அவரது அளவற்ற இரக்கத்தால், இயேசுவின் உயிர்த்தெழுதலின் வழியாக, அழியாத அல்லது மறையாத உயிருள்ள நம்பிக்கையாக நம்மை மீண்டும் உருவாக்கினார் என்றும், இவ்வுலகை விட்டுப் பிரிந்த நமது அன்புக்குரியவர்கள் அனைவருக்காக நாம் செபிக்கும் செபத்தையும் அவர் கேட்பாராக என்றும் கூறினார்.

இழப்பின் துயரில் வேதனையில் இருப்பவர்களுக்கு ஆறுதலையும், இறந்தவர்கள் இறைவனில் வாழ்கிறார்கள், பூமியில் புதைக்கப்பட்ட அவர்களின் உடல்கள் ஒரு நாள் திருமகனின் உயிர்ப்பின் வெற்றி யில் பங்குகொள்ளும் என்று செபித்த திருத்தந்தை அவர்கள், திருஅவையின் இத்தகைய பாதையில் தூய கன்னி மரியாவை ஒளிரும் அடையாளமாக வைத்துள்ளார் என்றும் எடுத்துரைத்தார்.

முடிவில்லாத மகிமையாகிய உம்மை நோக்கிச் செல்லும் இந்தப் பாதையிலிருந்து எந்தத் தடையும் திசை திருப்பாது என்ற நம்பிக்கையை அன்னை மரியின் பரிந்துரையின் வழியாக நிலைநிறுத்த வேண்டும் என்று கூறித் தனது செபத்தை நிறைவு செய்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூடியிருந்த மக்களுக்குத் தன் அப்போஸ்தலிக்க ஆசீரை வழங்கினார்.


**காணி / வீடு விற்பனைக்கு**

சாவகச்சேரி, நுணாவில்,
மட்டுவில் சந்தியில்
1 3/4 பரப்புக் காணியில் அமைந்த
மூன்று அறைகளைக் கொண்ட வீடு
விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:- 0764645279**


## Dilexit nos .....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மறந்துவிடாதபடி திருஇருதயத்தின் மீதான உண்மையான பக்தியைப் புதுப்பிக்க அழைப்பு விடுக்கின்றது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். இயேசுவின் திருஇருதய அன்பானது நம்மை அன்பு செய்ய உந்தித்தள்ளுகின்றது, நமது சகோதரர்களை நோக்கிச் செல்ல நம்மை அனுப்புகின்றது என்று குறிப்பிட்டுள்ள திருத் தந்தை அவர்கள், நம்மேல் அன்பு கூர்ந்த கடவுளின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கவே முடியாது என்னும் திருத்தூதர் பவுலின் வரிகளை மேற்கோள்காட்டி ஆரம்பமாகின்றது. அவரது திறந்த இதயம் நமக்கு முன் சென்று நிபந்தனையின்றி நமக்காகக் காத்திருக்கின்றது என்றும், நம்மை அன்பு செய்வதற்கும், அவருடைய அன்பைப் பெறுவதற்கும் அவரே நம்மை முதலில் அன்பு செய்தார் என்றும் எடுத்துரைத்துள்ள திருத்தந்தை அவர்கள், நியாயமான, ஆதரவான மற்றும் உடன்பிறந்த உணர்வுடன் கூடிய உலகத்தை நோக்கி ஒன்றிணைந்து நடக்கவும், கற்றுக்கொள்ளவும் இயேசுவின் திரு இருதய அன்பு நம்மைத் தூண்டுகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கிறிஸ்துவின் அன்பு அவருடைய திருஇருதயத்தில் பிரதிபலிக்கிறது, உலகம் தன் இதயத்தை இழந்துவிட்டதாகத் தெரிகிறது, இதயத்திற்குத் திரும்புவதன் முக்கியத்துவம், இயேசுவின் செயல்கள் மற்றும் அன்பின் வார்த்தைகள், வார்த்தை மனுஉருவான நற்செய்தியின் உள்ளடக்கத்திற்குத் திரும்புதல், தாகம் தீர்க்கும் அன்பால் நிரப்பப்பட்ட புனிதர்கள் மற்றும் புனிதைகள், புனித மார்கரெட் மேரி அலகோக் பெற்ற திருஇருதயக் காட்சிகள், நம் சகோதர சகோதரிகளிடம் நம்மை அனுப்பும் கிறிஸ்து வின் திருஇதயத்தின் மீதான பக்தி, உலகை அன்பு செய்ய வைக்கும் பணி என்னும் பக்கத்தலைப்புகளுடன் இடம்பெற்றுள்ள இச்சுற்றுமடலானது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் செபத்துடன் நிறைவுபெறுகின்றது.

## அமதிகளின் உயர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு, யாழ். மாகாணங்களுக்கு விஜயம் மேற் கொண்டு சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தார்.

14வது உயர் தலைவராக 2022ஆம் ஆண்டு பணிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டபின் அவர் இலங்கைக்கு விஜயம் செய்யும் முதலாவது திருப்பயணமாகும். அ.ம.தி.களையும் அவர்களின் பணித்தளங்களையும் பார்வையிடுவதோடு அ.ம.தி.களுடன் பணிபுரிவோர், அ.ம.தி.களின் பணியைப் பெறுவோர், பொதுநிலைப் பணியாளர்கள், துறவறத்தோர், ஆயர்கள், திருத்தந்தையின் பிரதிநிதி எனப் பலரையும் அவர் சந்தித்தார். அ.ம.தி.களால் நடத்தப்படும் விசேட தேவையில் உள்ளவர்களுக்கான பணிமையங்கள், அ.ம.தி.களால் நிர்வகிக்கப்படும் பங்குகள் - இல்லங்கள், அ.ம.தி.கள் பணிபுரியும் வைத்தியசாலைகள், பாடசாலைகள், தொழில் நிறுவனங்கள் எனப் பல்வேறுபட்ட இடங்களையும் சென்று பார்வையிட்டுத் தமது உடனிருப்பையும் அக்கறையையும் அன்பையும் வெளிப்படுத்தினார். அவருடைய வருகையின்போது மூன்று சகோதரர்கள் அமலமரித்தியாகிகள் ஆகவும் இருவர் அருட்பணியாளர்களாகவும் அருட்பொழிவு செய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## திருவுளப்பணியாளர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

23ஆம் திகதி மன்னார் மறைமாவட்டத்தில் நடைபெற்ற திருவுளச் சபைத் திருத்தொண்டர் அன்றூ பிராங்லின் பத்மலிங்கம் அவர்களின் குருத்துவத் திருநிலைப்படுத்தல் திருச்சடங்கிலும் கலந்துகொண்டார்.

அத்துடன் 24ஆம் திகதி வியாழக்கிழமை மன்னார் பேசாலை வெற்றிநாயகி அன்னை மற்றும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை நேற்றைய தினம் குழந்தை இயேசுபுரம் குழந்தை இயேசு ஆலயங்களில் பொதுநிலையினரைச் சந்தித்ததுடன் யாழ்ப்பாணம் திருவுள பணியாளர் சிறிய குருமடத்திலும் மாலை வவுனியா கோமரசங்குளம் பிரதேசத்திலும் பொதுநிலையினரைச் சந்தித்துள்ளார்.

மேலும் 28ஆம் திகதி இந்நியாவிற்குச் செல்லவுள்ள இவர் அங்கு கேரளா, தமிழ்நாடு மாகாணங்களின் திருவுளச் சபைக் குருக்களைச் சந்தித்து மீண்டும் இலங்கைக்குத் திரும்பி வருகின்ற 01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருத்தந்தையின் இலங்கைக்கான திருத்தூதுப் பிரதிநிதி பேரருட்தந்தை பிறையன் உடக்குவே அவர்களையும் சந்திக்கவுள்ளார்.

## கிளி. புனித திரேசாள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அருட்தந்தை பெனற், முல்லைத்தீவு மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை அன்ரனிப்பிள்ளை, அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், இறைமக்களெனப் பலரும் கலந்துகொண்டனர். வரலாற்றுச் சிறப்புமிக்க புனித திரேசாள் ஆலயம் கிளிநொச்சி நகரத்தின் மத்தியில் 1930களில் கொட்டில் ஆலயமாகத் தோற்றம் பெற்று பின் அமலமரித்தியாகிகள் சபை அருட்தந்தை யோசப் சூசைநாதர் அவர்களின் காலத்தில் ஒரு கட்டடமாக அமைக்கப்பட்டு அப்பகுதி மக்களுக்கும் வேறு இடங்களிலிருந்து வன்முறையால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சி நகருக்கு இடம்பெயர்ந்துவந்த மக்களுக்கும் அடைக்கலம் கொடுத்த ஆலயமாக இது அமைந்திருந்தது. வரலாற்றுச் சிறப்புமிக்க இவ் ஆலயத்தைப் புதிய ஆலயமாகக் கட்டியெழுப்ப இப்பகுதிமக்கள் முயற்சியெடுத்ததன் பயனாக 2006ஆம் ஆண்டு அப்போதைய ஆயராகவிருந்த பேரருட்தந்தை தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களின் காலத்தில் பங்குத்தந்தை அருட்தந்தை பெனற் அவர்களின் தலைமையில் அப்போதைய குருமுதல்வர் அருட்தந்தை நீக்கிலஸ் அவர்களினால் புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு கட்டுமானப் பணிகள் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

தெடர்ந்து அருட்தந்தை யாவிஸ் அவர்களின் காலத்தில் பணிகள் முன்னெடுக்கப்பட்டு அருட்தந்தை ஜோர்ச் அவர்களின் காலத்தில் ஆலயக் கட்டுமானப்பணியின் பெரும் பகுதி நிறைவடைந்தது. தொடர்ந்து அருட்தந்தை ஜேசுதாசன் அவர்களின் பணிக்காலத்தில் ஒரு சில வேலைகள் முன்னெடுக்கப்பட்டு தற்போதைய பங்குத்தந்தை அருட்தந்தை சில்வெஸ்ரர்தாஸ் அவர்களின் காலத்தில் இவ் ஆலயத்திற்கான அபிஷேகத் திருச்சடங்கு நடைபெற்று இவ்வாலயம் புதுப்பொலிவுடன் காட்சிகொடுக்கின்றது.

# நாடாளுமன்றத் தேர்தல் 2024: பிசாசா? ஆழ்கடலா?



கரவையூர் செல்வம்

நாடாளுமன்றத் தேர்தல் அண்மித்துள்ளது. நாட்டு நிலமைகள் - களநிலைகள் என் போன்ற சாதாரண மக்களுக்குக் குழப்பங்களையே உருவாக்குகின்றன. ஒருசில புத்தி ஜீவிகள், "நாங்கள் (தமிழர்) ஓர் இக்கட்டான நிலையில் உள்ளோம்," என்று யதார்த்தத்தைக் கூறுகிறார்கள். ஆனால், இந்தப் புத்தி ஜீவிகள்கூட ஒரு தீர்வை முன்வைக்கத் தயங்குகிறார்கள்! இக்கட்டான நிலையில் இருக்கும்பொழுது அதிலிருந்து வெளிவர முடிவுகள் எடுப்போர்தான் தலைவர்கள் / தலைவிகள். இப்படிப்பட்ட வேளைகளில் தலைவர்கள் ஓர் இடர்வரவு (risk) எடுக்கத்தான் வேண்டும். அந்த இடர்வரவு எடுப்பதுவும் தலைமைத்துவப் பண்புகளில் ஒன்று. இந்தப் பின்னணியிலிருந்து இந்தக் கட்டுரையை எழுதுகிறேன்.

## சனாதிபதித் தேர்தல்

சனாதிபதித் தேர்தல் முடிந்து விட்டது. மும்முனைப் போராட்டம் என்று ஊடகங்கள் இறுதிவரை எழுதிவந்தன. ஆனால், தேர்தல் முடிவுகள் இருமுனைத் தேர்தலையே அறிவித்தது. தேர்தல் முடிவுகள் முற்றிலும் ஆச்சரியத்தைத் தரவில்லை. ஆயினும், ஆச்சரியமெதுவுமில்லையென்று சொல்லவும் முடியாது.

சென்ற சனாதிபதித் தேர்தலில் (2019). 418,553, (3.16%) வாக்குகள் பெற்ற, அனுர குமார திசநாயக்க, 2024 தேர்தலில் 5,634,915 வாக்குகள் பெற்றது ஓர் அதிசயந்தான். ஆனால் இது எதிர் பார்த்ததை விட மிகக் குறைவு என்று கூறும் சிங்கள மக்கள் தெற்கில் இருக்கிறார்கள். அவர்கள் எதிர்பார்த்த புதிய அலை பெரிதாக எழவில்லை.

2019 தேர்தலில் 5,564,239 வாக்குகள் பெற்ற சஜித் பிரமேதாசா, இம்முறை 4,363,035 வாக்குகள் பெற்றது ஒரு வீழ்ச்சி, பின்கதவால் ஆட்சிக்கு வந்து, மக்களால் தெரிவு செய்யப்படாத, சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஈராண்டு ஆட்சியில் பொருளாதாரப் புதுமைகள் செய்தார் என்று பெரிதாகப் பாராட்டப் பட்டவர், 2,299,767 வாக்குகள் மட்டுமே பெற்றது பெரும் வீழ்ச்சி. இவற்றை ஆராய்வது இக் கட்டுரையின் நோக்கமல்ல.

300,300 (2.2%) வாக்குகள் நிராகரிக்கப்பட்டமை எனக்கு ஓர் ஏமாற்றம். சென்ற சனாதிபதித் தேர்தலில் 135,452 (1.01%) வாக்குகள் வீணாக்கப்பட்டன. ஏன் இந்த வீழ்ச்சி சிந்திக் வேண்டிய ஒன்று.

## அனுரா அலை

அனுராவுக்கு ஓர் அலை வீசுகிறது என்று தெற்கிலிருந்து செய்திகள் எமக்குத் தேர்தலுக்கு முன்னரே வந்தன. இந்த அலை கிராமங்களில் தோன்றி நகரம் வந்தது. அனுரா யாழ். நகரில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் கட்சிக்கூட்டத்தில் அவரே இந்த அலைபற்றிப் பேசினார். "தெற்கில் எங்கள் பால் ஓர் அலை எழுந்துள்ளது. நாம் தேர்தலில் வெற்றி பெறுவோம். இந்த அலையில் தமிழ் மக்கள் தள்ளி நிற்கக்கூடாது. தமிழர்களும் இந்த மாற்றம் வேண்டிய அலையில் சேரவேண்டுமென்று" தமிழ் மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

## தேசிய மக்கள் சக்தி

இந்தத் தேசிய மக்கள் சக்தி எங்கிருந்து வந்தது? இதில் ஓர் ஒளிவு மறைவுமில்லை. ஜாதிக விமுக்திக் பெரமுனவில் (JVP); இருந்து பரிணமித்ததே தேசிய மக்கள் சக்தி.

JVPயின் பின்னணி எங்களுக்குத் தெரியும். சிங்களத் தேசியம் பேசிய கட்சி. தமிழினத்திற்கு எதிராகவும் தமிழ்த் தேசியத்திற்கெதிராகவும் பேசியும் செயற்பட்டும் வந்த கட்சி. சிங்கள முதலாளி வர்க்க அரசுக்கெதிராக ஆயுதப் போராட்டம் நடத்திய கட்சி. அந்தப் போராட்டத்தை சிங்கள அரசால் அடக்கமுடியாமல், இந்திய உதவியை நாடியது. இந்திய இராணுவத்தின் உதவியுடன்தான் JVP யின் கிளர்ச்சி அடக்கப்பட்டது. அந்தக் கிளர்ச்சியில் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டார்கள். JVPயின் கிளர்ச்சி இருதரம் நடைபெற்றன. இந்த நிகழ்வை சிங்கள மக்கள் மறக்கவில்லை. அதனா லேயே JVP சிங்கள மக்களின் ஆதரவை நீண்டகாலமாகப் பெற முடியாமல் போனது. அதேவேளை சிங்கள மக்கள் இந்தியாவை வெறுத்துவருவதற்கும் மேற்கூறிய இந்திய இராணுவப் படை சிங்கள இளைஞர்களைக் கொன்றது ஒரு முக்கிய காரணம். அத்துடன், சாதாரண சிங்கள மக்கள் இந்திய நாட்டைத் தமிழர்களுடன் (தமிழ்நாடு) அடையாளப்படுத்துவது இன்னோர் காரணம்.

## மனமாற்றமா?

சிங்களத் தேசியம் பேசி ஆயுதப் போராட்டத்தை நடத்திய JVPயில் இருந்து பரிணமித்த தேசிய மக்கள் கட்சி (NPP) அண்மைக் காலந்தொட்டு தேசியம் மட்டுமே பேசுகின்றது. அதாவது, சிங்களம், தமிழ், முஸ்லீம், மலே என்று பிரித்துப் பேசாமல், எல்லோரும் இந்த நாட்டுப் பிரஜைகள், இந்நாட்டு மக்கள், நாம் ஒருங்கிணைந்து, சமத்துவமாக வாழ்ந்து இந்த நாட்டின் பொருளாதாரத்தை வளர்ப்போம், சமமாக வாழ்வோம், என்று மேடைதோறும் பேசுகிறார்கள்.

அனுரா தெற்கில் ஒன்றும் வடக்கில் ஒன்றுமாகப் பேசும் சிங்கள அரசியல்வாதிகளைப் போல் பேசவில்லை என்பதுவும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

யாழ். தேர்தல் மேடையில் பேசிய அநுரா, "நான் சமஷ்டி தருவேன் என்று சொல்லவரவில்லை, 13 தருவேன் என்று சொல்ல வரவில்லை. எதையும் தமிழர்களுக்குத் தருவேன் என்று சொல்ல வரவில்லை. எல்லோரும் இணைந்து இந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவோம். எல்லோரும் சமத்துவமாக வாழ்வோம்," என்று பேசினார்.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாகச் சொன்னார். காணாமல் ஆக்கப்பட்ட தமிழருக்கு நடந்ததென்ன என்று அறிந்து சொல்வதாகவும் சொன்னார். நீதி நிலை நாட்டப்படும் என்று பல மேடைகளில் கூறினார். ஊழலை அழிப்பதாகச் சொன்னார். யாழ். நூலகம் எரிக்கப்பட்ட நிகழ்வை எந்த ஒரு சிங்கள அரசியல்வாதியும் இதுவரை பேசாதவாறு அநுரா பகிரங்கமாகப் பேசினார். விரிவாகவும் நெஞ்சைத் தொடுமளவிற்கு மேடையில் பேசிய முதல் சிங்களத் தலைவர் அனுர குமர திசநாயக்க மட்டுமே.

கலாநிதி ஹரிணி அமரசூரிய கல்வியில் அரசியல் தலையிடாது தலையிடக்கூடாது என்று கொழும்பில் சொன்னார். மருத்துவத்தில் உள்ள அழுக்குகளைக் கழுவுவதாக கலாநிதி அருண் கோகிலன் கூறினார். புனிதம் எனக் கணிக்கப்படும் இத் துறைகளில்கூட (கல்வி, மருத்துவம்) இவ்வளவு அழுக்குப் படிந்தது இந்த நாட்டின் கேவலமான நிலையை எடுத்துக் காட்டுகின்றது.

சனாதிபதியாக பதவியேற்றதும், தான் சொல்லியவற்றை அநுர செயற்படுத்துகிறார். ஊழலுக்கு முன்னுரிமை கொடுத்து ஊழலில் ஈடுபட்டவர்களைப் பட்டியல்போட்டுக் காட்டி அவர்களை நீதிமன்றம் கொண்டு வருவதாக உறுதியளித்தார். He walks the talk. இது தலைமைத்துவ பண்புகளில் ஒன்று. சொல்வதைச் செய்வதே தலைமைத்துவப் பண்பு.

ஒட்டுமொத்தமாக இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது, இது தேசிய மக்கள் கட்சியின் மனமாற்றமா? அன்றேல் ஓர் அரசியல் சூழ்ச்சியா? என்று வினவ வைக்கிறது. மருண்டவன் கண்களுக்குக் காண்பதெல்லாம் பேய் என்று சொல்வது போல், எங்களில் சிலருக்கு (தமிழருக்கு) தேசிய மக்கள் கட்சியை ஜனதா விமுக்தி பெரமுன என்று மட்டுமே பார்க்க முடிகின்றது. மனம்மாறிய தேசிய மக்கள் கட்சியைப் பார்க்க முடியவில்லை. அநுரா குமார திசநாயக்கவின் பின்னணியைப் பார்த்து அவர் தமிழருக்கெதிராகச் செய்த தவறுகளை, அவற்றினூடாக ஒவ்வொரு செயல்களையும் பார்க்கிறார்கள். இதை தவறென்று சொல்ல முடியவில்லை. ஆனால், கடந்த ஐந்து வருடங்களாக இவர்கள் மனம் மாறி பழையன கழிந்து புதிய கொள்கையோடு புதிய பெயரோடு தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள்.

ஒருகாலத்தில், சிங்கள மக்களும் பெரிதாக இவர்களை (JVP) ஏற்றுக்கொள்ளவில்லை. நீண்டகாலமாக சிங்கள அரசுகள் மாறிமாறி சிங்கள மக்களை ஏமாற்றியது மட்டு மல்ல அவர்களை வறுமையில் வாழ வைத்தார்கள். இப்படிப்பட்ட ஒரு பின் னணியில் தான் அரகலிய என்ற அமைதிப் போராட்டம் கொழும்பில் நடைபெற்றது. தெற்கின் பல்வேறுபட்ட இடங்களில் இருந்து சிங்கள இளைஞர்கள் - ஆண்களும் பெண்களும் கொழும்பில் அமைதியாக ஒன்று கூடிப் போராடினார்கள். கணிசமான சிங்கள மக்கள், கத்தோலிக்க குருக்கள் துறவிகள் உட்பட இவர்களுக்கு பகிரங்கமாக ஆதரவு கொடுத்தார்கள் உலகின் பல்வேறு நாடுகளின் கவனத்தை இந்த அமைதிப் போராட்டம் ஈர்த்தது. பெரும்பான்மையான சாதாரண சிங்கள மக்கள் சிங்கள அரசியலில் ஒரு மாற்றத்தை விரும்பினார்கள்.

அந்த மாற்றத்தின் அடையாளமாகவே அவர்கள் தேசிய மக்கள் கட்சியைப் பார்க்க முற்பட்டார்கள். தேசிய மக்கள் சக்தி சிங்களத் தேசியம் பேசவில்லை என்பது அவர்களுக்குத் தெரியும். சமத்துவம் பேசுகிறார்கள் என்றும் அவர்களுக்குத் தெரியும்.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர், சமத்துவம் பேசும் தேசிய மக்கள் சக்தியை செயற்பட சிங்கள பௌத்த பேரினவாதமும் பௌத்த பிக்குகளும் விடுவார்களா. இனத்து வேஷம் பேசும் தீய சக்தி சிங்களவரிடையே இன்னமும் உண்டு. இவை தமிழர்களின் கேள்விகள்

## எனது நீண்ட காலக் கனவு

ஜீ.ஜீ. பொன்னம்பலம் 50 - 50 பேசிய காலந்தொட்டு, யாராவது ஒரு தலைவனோ தலைவியோ சமத்துவம் பேசமாட்டார்களா? என்று என்னுள் நான் கேட்டுக்கொண்டே வந்தேன். அது சாத்தியமாகாது என்ற ஒரு சிந்தனையில், அதையிட்டு நான் பேசவோ எழுதவோ இல்லை.

சமஷ்டி என்றும், தமிழ் ஈழமென்றும், தமிழர்தாகம் தமிழ் ஈழத்தாக மென்றும், பின்னர் 13 என்றும், 13+ என்ற கோஷங்கள் மாறி மாறி எழுந்தன. ஆனால், தமிழர்கள் தோல்வி மேல் தோல்வியைத் தழுவினர். பொது வேட்பாளர்கூட தோல்வியிலேயே முடிந்தது.

## எதையுமே சாதிக்கவில்லை

கடந்த 75 வருடங்களாக தமிழ்த் தலைமைகள் தமிழர்பால் எதையுமே சாதிக்கவில்லை. ஆயினும் தமிழ் அரசியல்வாதிகள் தங்கள் பேச்சுத்திறமைகளை நாடாளுமன்றத்தில் காட்டியிருக்கிறார்கள். அவ்வளவுதான்.

இப்பொழுது வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகளைப் பார்க்கும்பொழுது தமிழ் தேசியமும் சுயநிர்ணயமும் பேசிப் பேசி தமிழ் மக்களை ஏமாற்றியது மட்டுமல்ல மாளிகைகள் போல் வீடுகளைக் கட்டி சொகுசாக வாழ்ந்தது மட்டுமல்ல அரசியல் சலுகைகளைப் பெற்றதும் மட்டுமல்ல Bar permit எடுத்துக் கொடுத்தமை தமிழ் தலைமைகள் எவ்வளவு கேவலமான நிலைக்குச் சென்றுள்ளார்கள் என்பதைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

## யாரின் செல்வாக்கு?

யாழ். மாவட்டத்தில் சஜித் பிரேமதாச 121,177 வாக்குகள் பெற்று முதலாவது இடத்தைப் பெற்றார். பொது வேட்பாளர் 116,688 வாக்குகள் பெற்று இரண்டாம் இடத்தையும் ரணில் விக்கிரமசிங்க 84,558 வாக்குகள் பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றார்.

அநுர திசநாயக்க யாழ். மாவட்டத்தில் 27,086 வாக்குகள் பெற்றது அதிசயமல்லவா?

வன்னி மாவட்டத்தில், சஜித் பிரேமதாசா 139,110 வாக்குகளையும், ரணில் 91,132 வாக்குகளையும் பெற்றவேளை, அநுர திசநாயக்கா விற்கு 38,832 வாக்குகள் கிடைத்தனவே! பொதுவேட்பாளருக்கு என்ன நடந்தது? திருகோணமலை மாவட்டத்தில், சஜித் பிரேமதாசவிற்கு 95,423 வாக்குகள் கிடைத்த வேளை, ரணிலுக்கு 52,573 வாக்குகள் கிடைத்தன. பொது வேட்பாளருக்கு 36,832 வாக்குகள் கிடைத்து மூன்றாம் இடத்தைப் பெற்றார். அதேவேளை அனுர திசநாயக்கவிற்கு 21,412 வாக்குகள் கிடைத்தன. மட்டக்களப்பு மாவட்டத்தில், சஜித் பிரேமதாசா 139,110 வாக்குகளையும், ரணில் விக்கிரம சிங்க 91,132 வாக்குகளையும் முறையே பெற்றனர். மூன்றாவதாக வந்தவர் யார்? அனுர திசநாயக்க 38,832 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

இதில் கவனிக்க வேண்டியதென்னவென்றால், அனுர திசநாயக்கவின் பின்னணி தெரிந்தும், பெரிதாக அவர் சார்பாக தேர்தல் பிரச்சாரங்களை நடத்தாமல் இருந்தும் அவர் 137,216 வாக்குகள் தமிழர் தேசியத்தில் இருந்து பெற்றுக் கொண்டார்.

பொதுவேட்பாளர் ஒட்டுமொத்தமாகப் பெற்ற வாக்குகள் 226,343 மட்டுமே.

ஒரு குறிப்பிட்ட கட்சியின் ஒரு தமிழ் அரசியல்வாதி சஜித் பிரேமதாசவுக்கு வாக்களிக்கக் கேட்டிருந்தார். இன்னொரு தமிழ்க் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு வாக்களிக்கும்படி கேட்டிருந்தார். சிவில் சமூகமும் சில புத்திஜீவிகளும் இணைந்து பொதுவேட்பாளருக்கு வாக்களிக்குமாறு கேட்டிருந்தார்கள். தேர்தல் முடிவு பதில் சொல்லும் தமிழ் மக்களிடையே யாருடைய செல்வாக்கு அதிகமாக உள்ளது என்று.


இம்முறை தமிழர்கள் ஒரு குழம்பிய நிலையில்தான் வாக்களித்தார்களா? இல்லை, தெளிவோடுதான் வாக்களித்தார்களா?

(தொடர்ச்சி 6ம் பக்.)

# சகாராப் பாலைநிலத்தில்

## அ.ம.தி.களின் உயர் தலைவர்!

துறவற சபைகளின் உயர் தலைவர்கள் தங்களின் சபை உறுப்பினர்கள் பணியாற்றும் நாடுகளுக்கு நேரில் சென்று உறுப்பினர்களின் வாழ்வையும் பணிகளையும் பார்ப்பது வழக்கமான ஒன்றாக இருந்து வருகின்றது. அவ்வகையில்தான்



அ.ம.தி.களின் உயர் தலைவர் பேரருட்திரு. லூயிஸ் இக்னாசியோ றோயிஸ் அலன்சோ அடிகளாரின் வருகையும் 2024ஆம் ஆண்டில் நவம்பர் மாதத்தில் (நவம்பர் 14 - டிசம்பர்02) அமைந்திருந்தது.

## பேரருட்திரு 'சிச்சோ' அடிகளார்:


பேரருட்திரு. லூயிஸ் இக்னாசியோ றோயிஸ் அலன்சோ அடிகளார் தமது தாய் சூட்டிய 'சிச்சோ' என்ற பெயரினாலேதான் அதிகமாக அறியப் பட்டவர்.

சிச்சோ என்ற பெயர் அவருக்கு மிகவும் நெருக்கமான, செல்லப் பெயராக இருப்பது குறிப்பிடத்தக்கது. சிச்சோ அடிகளார் ஸ்பெயின் நாட்டில் மற்றிட் நகரில் டிசம்பர் 4ஆம் திகதி 1963இல் பிறந்தவர். 1982இல் அமலமரித் தியாகியாக வாக்குத்தத்தம் மேற்கொண்டு, மேமாதம் 21ஆம் திகதி 1988இல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

## பதின்நான்காவது உயர் தலைவர்:

சிச்சோ அடிகளார் குருவாகியபின், ஸ்பெயின் அ.ம.தி.களின் மாகாணத்தில் அழைத்தல்கள் ஊக்குவிப்பாளராகவும் (1988-1992), அ.ம.தி.களின் ஸ்பெயின் உயர் குருமடத்தின் மேலாளராகவும் (1996-1999), அ.ம.தி.களின் ஸ்பெயின் மாகாண முதல்வராகவும் (2000-2004), ஐரோப்பாக் கண்டத்தின் அ.ம.தி.களின் உயர் தலைவரின் ஆலோசகராகவும் (2004-2016) பணியாற்றியவர்.

மிடிரரேனியன் பகுதியின் தென் சகார பணிப் பொறுப்பை மேற்கொண்டிருந்த வேளை (2017-2022) அ.ம.தி.களின் 37வது உயர் பொதுச்சபை மாநாடு 2022இல் உரோமை நகரில் நடைபெற்றுக் கொண்டிருந்த போது 14வது உயர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். சகாராப் பாலைநிலப் பிரதேசத்தில் இஸ்லாமியரிடையே நற்செய்திப்பணி புரிந்து கொண்டிருந்தபோது உரோமைக்கு அழைக்கப்பட்டவர் சிச்சோ அடிகளார்.



ஊக்குவிக்கின்ற ஓர் உன்னதமான மனிதர்தான் பேரருட்-திரு சிச்சோ அடிகளார்.







இலங்கையில் தற்போது கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இரு மாகாண அலகுகள் இருப்பதனால் நவம்பர் 14 தொடக்கம் 23வரை கொழும்பு மாகாண உறுப்பினர்களையும், நவம்பர் 24 தொடக்கம் டிசம்பர் 01வரை யாழ். மாகாண உறுப்பினர்களைச் சந்தித்திருக்கின்றார். கொழும்பு மாகாண உறுப்பினர்களைச் சந்திக்கும் பணி நிறைவடைந்த நிலையில் யாழ். மாகாணத்தில் அவரின் வருகையும் சந்திப்பும் நடைபெற்று முடிந்திருக்கிறது.

## உயர் பொதுச்சபைக்கு வெளியே தெரிவான முதல்தலைவர்!

அ.ம.தி.களின் உயர் பொதுச் சபையில் பங்கெடுத்தவர்கள்தான் இதுவரையில் உயர் தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள். உயர் பொதுச்சபையில் பங்கேற்காது தெரிவு செய்யப்பட்ட முதல் உயர் தலைவர் பேரருட்திரு சிச்சோ அடிகளார் என்பது இங்கு குறிப்பிடத்-தக்கது. ஸ்பான்யம், ஆங்கிலம், பிரெஞ்சு, இத்தாலி ஆகிய

ஏழைகளையும், மிகவும் தூர இடங்களில் வசதி வாய்ப்புக்கள் இன்றி, பல சவால்களின் மத்தியில் பணிபுரியும் அ.ம.தி.களைத் தேடிச்சென்று அவர்களோடு தனது அக்கறையையும், அன்பையும், உடனிருப்பையும் பகிர்ந்து கொள்ளுகின்ற ஓர் உண்மையான இயேசுவின் சீடன்தான் 'சிச்சோ' அடிகளார்.





மேய்ப்புப்பணி சார்ந்த வருகையாகவும் சந்திப்பாகவும் இருப்பதோடு உத்தியோக பூர்வ வருகையாகவும் இது அமைந்திருந்தது. அ.ம.தி.களின் குழுமங்களைச் சந்திப்பது, அவர்களின் பணித்தளங்களைச் சென்று பார்ப்பது, அ.ம.தி.களின் பணிகளால் பயன்பெறுவோருடனான சந்திப்பு, அ.ம.தி.களோடு பணிபுரியும் பொது நிலையினர், துறவிகள், ஏனைய சமயத்தினர், ஆயர்கள் போன்றோருடனான சந்திப்பு என உயர் தலைவரின் வருகை பல்வேறுபட்ட சந்திப்புக்களையும் நிகழ்வுகளையும் கொண்டிருந்தன.

மொழிகளைச் சரளமாகப் பேச, எழுதத் கூடியவர். ஏற்கனவே அ.ம.தி.களின் மூன்று உயர் பொதுசபையில் பங்குபற்றி இருப்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஓர் உண்மையான இயேசுவின் சீடன்:

மிகவும் எளிமையும், சாந்தமும், பொறுமையும், கனிவும், அன்பும் உடையவர். ஆன்மீக தாகமும், நற்செய்தியைப் பரப்புவதில் ஆர்வமும் கொண்டவர். "ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்க" என்ற விருதுவாக்கை அமலமரித்தியாகிகளின் சபை நிறுவுனர் புனித யூஜீன் டி மசனட் கொண்டிருந்தார். இவ்விருதுவாக்கைத் தானும் வாழ்ந்து, தன் சகோதர துறவிகளையும் வாழ

## அ.ம.தி.களின் உலகளாவிய நிலை:

இன்று, உலகம் பூராகவும் 3200 அமலமரித் தியாகிகள் 70 நாடுகளில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களின் 01 கருதினாலும், 07 பேராயர்களும், 35 ஆயர்களும், 02 அப்போஸ்தலிக்க பரிபாலகர்களும் அடங்குவர். ஆபிரிக்கா-மடகஸ்காரர், இலத்தீன் அமரிக்கா, ஆசியா-ஓசியானியா, கனடா-அமெரிக்கா, ஐரோப்பா எனக் கண்டங்களாக வகுக்கப்பட்டு சபையின் உயர் தலைவரின் பொறுப்பில் சபை நிருவகிக்கப்படுகின்றது. அ.ம.தி.கள் குழுமத்தில் இணைந்து கொள்ளுகின்றவர்கள் இன்று அதிகமாக ஆபிரிக்க, ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருப்பது

இங்கு நோக்கத்தக்
அனைத்து துறவற
யினையே எதிர்கொ

## புனித யூஜின்

அப்போதை
பரிபாலகர் ஆயர் கெ
அழைப்பில் அருட்த
யில் நான்கு அ.ம.தி
திகதி 1847இல் வந்
புனித யூஜீன் டி மச
களை அனுப்பி நற்
இங்கு நினைவுகூரத
ஏறக்குறைய 200 
அ.ம.தி.களுக்கு எடு
இலங்கை
மேய்ப்புப்பணி ஆற்
மேய்ப்புப்பணி செய்
கியமை, ஆலயங்க
யெழுப்பியமை, கல்
உருவாக்கிக் கல்வி
கள்-ஏழைகள் கை
வர் விடுதிகள் நடத்
பணிகள், இளையே
நலப்பொதுப் பணிக
றிந்து பல்வேறுபட்ட
இன்றுவரை ஆற்றி
கடந்து வெவ்வேறு
பலர் பணியாற்றி வ
அழைத்தல்கள் பெ
கண்டிருப்பது குறிப்

## உயர் தலை

உயர் தல
னது மிக உணர்வு
கின்றது. அ.ம.தி.க
அவர்களுடையதாகு



# ல் இருந்து உரோமைக்கு!





இங்கு நோக்கத்தக்கது. அ.ம.தி.கள் சபையினர் மட்டுமல்ல, அனைத்து துறவற சபையினரும் இவ்வாறான நிலையினையே எதிர்கொள்கின்றனர்.

## புனித யூஜின்தாமே அனுப்பிவைத்தார்:

அப்போதையை யாழ். மறைவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஆயர் கொறன்ஸ் பெற்றாக்கினி ஆண்டகையின் அழைப்பில் அருட்தந்தை ஸ்ரிபன் சமேரியாவின் தலைமையில் நான்கு அ.ம.தி.கள் இலங்கையை நவம்பர் 28ஆம் திகதி 1847இல் வந்தடைந்தனர். அ.ம.தி.களின் நிறுவுனர் புனித யூஜீன் டி மசனட் அவர்களே இலங்கைக்கு அ.ம.தி.களை அனுப்பி நற்செய்திப்பணி ஆற்றியிருக்கின்றார் என்பது இங்கு நினைவுகூரத்தக்கது. ஆயர் யூஜீன் டி மசனட் ஏறக்குறைய 200 கடிதங்களை இலங்கையில் பணியாற்றிய அ.ம.தி.களுக்கு எழுதியிருப்பதும் ஆழ்ந்த சிந்தனைக்குரியது.

இலங்கையில் மறைமாவட்டங்களைக் கட்டி எழுப்பி மேய்ப்புப்பணி ஆற்றியமை, பங்குகளை நிருவகித்து மேய்ப்புப்பணி செய்தமை, சுதேச திருநிலையினரை உருவாக்கியமை, ஆலயங்கள் திருத்தலங்கள் போன்றவற்றை கட்டி-யெழுப்பியமை, கல்விச்சாலைகளையும் பாடசாலைகளையும் உருவாக்கிக் கல்வியறிவை ஊட்டியமை, சீர்திருத்தப் பள்ளிகள்-ஏழைகள் கைவிடப்பட்டேருக்கான இல்லங்கள்-மாணவர் விடுதிகள் நடத்தியமை, வைத்தியசாலை-சிறைச்சாலைப் பணிகள், இளையோர்-சிறுவர்களுக்கான பணிகள், சமூக நலப்பொதுப் பணிகளென காலத்தின் அறிகுறிகளைக் கண்ட-றிந்து பல்வேறுபட்ட பணிகளை அ.ம.தி.கள் அன்றுதொட்டு இன்றுவரை ஆற்றி வருகின்றனர். மேலும், இலங்கையைக் கடந்து வெவ்வேறு நாடுகளில் மறைப்பணியாளர்களாகப் பலர் பணியாற்றி வருகின்றார்கள். இலங்கையில் அ.ம.தி.கள் அழைத்தல்கள் பெருகி இரண்டு மாகாணங்களாக வளர்ச்சி கண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## உயர் தலைவர் அணிந்திருக்கும் சிலுவை:

உயர் தலைவர் அணிந்திருக்கும் திருச்சிலுவையா-னது மிக உணர்வுபூர்வமான வரலாற்றைக் கொண்டிருக்கின்றது. அ.ம.தி.களின் நிறுவுனர் புனித யூஜின் டி மசனட் அவர்களுடையதாகும். அ.ம.தி.களின் மரபிற்கேற்ப உயர் தலைவர் அணிகின்ற சிலுவையானது பாரம்பரியமாக நிறுவு-னருடையதாக இருந்து வருகின்றது. அவ்வகையில் உயர் தலைவரா-கிய பேரருட்திரு சிச்சோ அடிகளார் தப்போது நிறுவுனரின் திருச்சிலுவையை அணிந்திருக்கின்றார். புனித யூஜின் டி மசனட் இளைஞனாக இருந்தபோது 1807ஆம் ஆண்டு ஒரு பெரிய வெள்ளியன்று சிலுவையில் அறையுண்ட மெசியாவின் உடனான யூஜின் பெற்ற இறையனுபவமானது அவர் அணிந்த சிலுவையைக் காட்டிநிற்கின்றது. இன்று அ.ம.தி.கள் அணியும் சிலுவை, நிறுவுனரின் இறையனுபவத்தில் இருந்து அவர்களுக்குக் கிடைக்கின்ற அருள்வளமாகும். இதனைப் பார்ப்போர் பெறுகின்ற ஆசீர்வாதங்கள் எத்தனை எத்தனையோ!

## திருத்தந்தையின் அங்கீகாரம் பெற்று 200 ஆண்டுகள்:

யூஜின் டி மசனட் 1811இல் மறைமாவட்டக் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு மறைமாவட்டக் குருவாகவே பணிசெய்துகொண்டு 'புறவான்சின் மறைபரப்பாளர்கள்' என்ற பெயரில் துறவற சபையை 1816இல் ஆரம்பிக்கின்றார். எனினும் திருத்தந்தை 12ஆம் லியோ 1826இல் இத்துறவற சபையின் ஒழுங்கு நூலை அதிகாரபூர்வமாக அங்கீகரித்து 'அமலமரியின் மறைபரப்புத் தியாகிகள்' என்ற சிறுபெயர் மாற்றத் தையும் இத்துறவற சபைக்கு வழங்கி இச்சபையின் மறைபரப்புப் பணிகளை உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கின்றார். அ.ம.தி.களின் துறவற குழுமம் உலகளாவிய திருஅவையால் அங்கீகரிக் கப்பட்டு 200 ஆண்டுகளை வருகின்ற ஆண்டு காண இருப்பது பெரும் மகிழ்ச்சிக்குரியது மட்டுமல்ல, பெரும் ஆசீர்வாதத்திற்குரியது. ஏனெனில் தந்தையாம் இறைவன் அ.ம.தி.கள் ஊடாகத் தமது திருவுளத்தை உலகிலும், திருஅவையிலும் இரண்டு நூற்றாண்டுகளாக நிறைவேற்றி வருவது இறைவனின் மிகப்பெரும் ஆசீர்வாதமாகும்.


**செ. அன்புராசா, அமதி**
**மாங்குளம்**

## யாழ். அ.ம.தி.கள் மாகாணம்:

இலங்கையில் இற்றைக்கு 177 ஆண்டுகளாக, குறிப்பாக, 30 ஆண்டுகாலப் போர்க்காலத்தின் போதும், போர் மௌனிக்கப்பட்ட காலங்களின் பின்னரும் அ.ம.தி.கள் இம்மண்ணை விட்டுப் பிரியாது மக்களோடு மக்களாக இறுதிவரை வாழ்ந்ததும், பணிசெய்ததும், தொடர்ந்து பணிசெய்து வருவதும் அவர்களின் சாட்சிய வாழ்வுக்கான எடுத்துக் காட்டாகும். போரினால் பாதிப்புற்ற மக்களோடு இன்றும் தமது உடனிருப்பாலும் பல்வேறுபட்ட பணிகளாலும் தங்கள் நற்செய்திப் பணியை பல்வேறுபட்ட முகங்களோடு வாழும் ஏழையர்களோடு ஆற்றிவருவது மகிழ்ச்சிக்குரியது.

யாழ். மாகாணத்தைச் சேர்ந்த அ.ம.தி.கள் இலங்கையில் எட்டு மறைமாவட்டங்களில் தற்போது பணிபுரிவது குறிப்பிடத்தக்கது. பங்குப் பணிகளுக்கு அப்பால் மகா ஞானஒடுக்கம், பிரசங்கப் பணி, உளவள ஆற்றுப்படுத்தல், நீதி சமாதானப் பணி, வைத்தியசாலை - சிறைச்சாலைப் பணி, அவயவங்களை இழந்தவர்களுக்கான பணி, வசதிவாய்ப்புக்கள் இல்லாத மேலதிகக் கல்வியைத் தொடர முடியாதவர்களுக்கான கல்விப் பணி, பெண் தலைமைத்துவத்தைக் கொண்டவர்களுடனான பணி, பங்கு மேய்ப்புப் பணி, ஆசிரியப் பணி, உருவாக்கல் பணியென இன்னோரென்ன பணிகளை காலத்தின் தேவையுணர்ந்து அ.ம.தி.கள் இன்று ஆற்றி வருகின்றார்கள்.







## இளம் யாழ். மாகாண மறைப்பணியாளர்கள்:

யாழ். மாகாணத்தைச் சார்ந்த 24 இளம் அருட்பணியாளர்கள் மறைப்பணியாளர்களாகத் தற்போது வெளிநாடுகளில் பணிசெய்து வருவது குறிப்பிடத்தக்கது. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் திருஅவையின் தேவைகளை கருத்தில்கொண்டு, சபையின் விருதுவாக்கை சிந்தையில் ஏற்று, நெஞ்சினில் இருத்தி, செயற்பட்டு வருவது இறைவன் அ.ம.திகள் சபையினருக்கு அருளிய அபரிமிதமான கொடையாலே ஆகும்.

'ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்க' என்னை அனுப்பினார் என்ற ஆண்டவன் இயேசுவின் வார்த்தைகள் அ.ம.தி.களின் வாழ்விலும் பணியிலும் தொடருவது மகிழ்ச்சிக்குரியது. தங்களது உயர் தலைவரின் வருகையால் ஊக்கமும் உற்சாகமும் பெற்று இலங்கையின் கொழும்பு, யாழ். மாகாணங்களைச் சேர்ந்த அ.ம.தி.கள் புதிய உத்வேகத்தோடு எதிர்வரும் காலங்களில் பயணிப்பார்கள் என்று நம்பலாம்.

# அன்பின் மகிழ்வு



21

**குடும்ப சவால்களில் இயேசுவின் பிரசன்னம்**

குடும்பங்கள் நாளாந்த வாழ்வில் பல்வேறு விதமான சவால்களை சந்தித்து வருகின்றன இந்த சவால்கள் மத்தியில் இயேசுவின் பிரசன்னம் என்றும் உண்டு என்பதை திருத்தந்தை தனது திருமடலில் வலியுறுத்துகின்றார் இயேசு குடும்பங்களின் சவால்களில் இருந்து தொலைவில் இருப்பவர் அல்ல மாறாக குடும்பங்களின் போராட்டங்களிலும் மகிழ்ச்சிகளிலும் இரண்டறக் கலந்து குடும்ப வாழ்வில் பின்னிப் பிணைந்திருக்க விரும்பினார்.

நற்செய்தியானது இயேசு எவ்வாறு குடும்பங்களோடு ஆழமான ஒன்றிப்பைக் கொண்டிருந்தார் என்பதனை தெளிவாக்குகின்றது. அவர் குடும்பங்களின் தேவைகளில் தன்னுடைய அக்கறையும் அவர்களுடைய துன்பங்களில் தன்பரிவிரக்கத்தையும் காண்பித்தார். நற்செய்தியில் வருகின்ற பல நிகழ்வுகள் இயேசு எவ்வாறு குடும்பங்களோடு ஆழமான உறவில் இருந்து அவர்களுக்கு ஆறுதல் அளித்தார் என்பதனை தெளிவாக்குகின்றது.

யேசுவின் குடும்பம் விசுவாசத்திற்கும் சகிப்புத்தன்மைக்கும் முன்னுதாரணம் இயேசு பெத்லகேமில் இருந்த ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தார். அவருடைய பிறப்புக்குப் பின் அவருடைய பெற்றோர்களான சூசைமரி ஏரோது அரசனின் கோபத்திலிருந்து தப்புவதற்காக எகிப்திற்கு அகதிகளாக ஓடினார்கள். இவ்வாறு எகிப்திற்கு ஓடிய இந் நிகழ்வு சமகால குடும்பங்கள் அனுபவிக்கின்ற போராட்டங்களாகிய இடம்பெயர்தல், பாதுகாப்பின்மை எதிர்காலத்தைப் பற்றிய அச்சம் போன்ற போராட்டங்களிலிருந்து திருக்குடும்பம் விலக்கப்படவில்லை என்பதை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறான போராட்டங்களில் திருக்குடும்பம் கடவுளின் நம்பிக்கையிலும் இறை பராமரிப்பிலும் தங்கி வாழ்ந்தது எனவே தான் நம் திருத்தந்தை

பிரான்சிஸ் அவர்கள் ஒவ்வொரு குடும்பமும் அதன் போராட்டங்கள் மத்தியிலும் திருக்குடும்பத்தைப் போல ஓர் முன்னுதாரணமான குடும்பமாக இருக்க முடியும் என்கின்றார்.

எனவே போராட்டங்களையும் சமகால சவால்களையும் குடும்பங்கள் அனுபவிக்கின்ற வேளையில் திருக்குடும்பத்தைப்போல இறைவையும் நம்பிக்கையில் நிலைத்துப் பய ணிக்க வேண்டும். சிறப்பாக போராட்டங்கள் மத்தியிலும் குடும்பங்களில் கிறிஸ்துவின் பிரசன்னம் உண்டு என்ற மனநிலையொடு சவால்களை எதிர்கொள்ள வேண்டும்.

நம்முடைய பகிரங்க பணிவாழ்வில் இயேசு குடும்பங்களைச் சந்தித்து அவர்களுக்கு வலுவூட்டினார். இரக்கம் காட்டினார். பேதுருவின் மாமியார் காய்ச்சலில் இருந்த போது அவரைச் சந்தித்து அவரைக் குணப்படுத்தினார். இழப்புகளைச் சந்தித்த குடும்பங்களுக்கு ஆறுதல் கூறினார். தன் ஒரே மகனை இழந்த விதவைப் பெண்ணைச் சந்தித்த போது இரக்கத்தால் தூண்டப் பெற்று அவருடைய ஒரே மகனை உயிர்ப்பித்தார். இவ்வாறான இயேசுவின் சந்திப்புக்கள் இயேசு குடும்பங்களின் மீது கொண்டிருந்த அன்பையும் பரிவிரக்கத்தையும் இன்னும் அவர்களோடு உடன் பயணிக்க விருந்த விருப்பத்தையும் பிரதிபலிக்கின்றது.

**அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்**
**அகவொளி குடும்ப நல மையம்**

எனவே தான் இன்றைய நவீன குடும்பங்கள் சந்திக்கும் சவால்கள் மத்தியில் இயேசுவை நம் குடும்பங்களுக்குள் கொண்டு வரவேண்டும். கானாவூர் திருமண விழாவில் ஓர் மிகப்பெரும் புதுமையைச் செய்து அந்தக் குடும்பத்தின் இன்னலைத் தீர்த்த இயேசு இன்னும் எமது குடும்பங்களுக்குள் வர விரும்புகின்றார். இன்னும் நிதிப் பிரச்சினை, மன அழுத்தம், உடல்நலப் பிரச்சனைகள் மத்தியில் மனம் உடைந்து போகாமல் இருக்க இயேசுவை எமது குடும்பங்களில் அழைப்போம்.

இலங்கையை எடுத்துக்கொள்ளும் போது நாளாந்த வாழ்வில் 8 அல்ல 9 பேர் வாழ்வில் தவறான முடிவெடுத்து தற்கொலை செய்கின்றார்கள். ஒரு வருடத்தில் கிட்டத்தட்ட 3000 பேர் வாழ்வை மாய்த்துக் கொண்டுள்ளனர். இது ஒரு பயங்கரமான நிலையாகும். இந்த நிலையில் இயேசுவின் பிரசன்னம் நம் குடும்பங்களுக்கு நம்பிக்கையைத் தர வேண்டும்.

**எவ்வாறு இயேசுவை நம் குடும்பங்களுக்குள் கொண்டு வருவது**

1. குடும்பங்களின் நல் உரம் செபமாகும். ஒவ்வொரு நாளும் ஒருசில நிமிடங்களை ஏனும் செபத்துக்காக ஒதுக்க வேண்டும்? இரண்டாம் ஜோண் போல் கூறுவது போல ஒன்றாகச் செபிக்கும் குடும்பமானது ஒன்றாக வாழும்" செபம் கிறிஸ்துவை எம் குடும்பத்துக்குள் கொண்டு வருகின்றது. குடும்பத்தின் காயங்களைக் குணப்படுத்துகின்றது. இன்னும் குடும்பத்தில் ஒற்றுமையை வளர்க்கின்றது. போராட்டங்கள் மத்தியில் நம்பிக்கையை வளர்க்கின்றது.

2. விருந்தோம்பல்கள் இயேசுவை நம் குடும்பங்களுக்குள் அழைக்கின்றது. சிறப்பாக ஏழை எளியவர்கள் தேவையில் உள்ளவர்களை நாம் நமது வீட்டுக்குள் அழைக்கும் போது இயேசுவையே அழைக்கின்றோம். அன்னை திரேசாள் ஏழைகளில் இயேசுவைக் கண்ட ஓர் மாபெரும் புனிதர். எனவே ஏழைகள் தேவையில் உள்ளவர்கள், பெரும் நெருக்கடியில் உள்ளவர்கள் எம் வீட்டுக்கு வரும் போது அவர்களுக்கான விருந்தோம்பல்களைச் செய்யும்போது இயேசுவின் பிரசன்னம் நம் வீட்டை நிரப்புகின்றது.

இவ்வாறு பல்வேறு சவால்கள் மத்தியிலும் நாம் மனம் தளராது பயணிக்க இயேசுவை எமது குடும்பத்துக்குள் அழைப்போம். சவால்கள் மத்தியில் மனம் தளராது பயணிப்போம்.

# அகவொளி குடும்ப நலமையம் திருமண சேவை





## மணமகள் தேவை

வயது : - 29
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை- O/L
தொழில் :- மேசன் வேலை
பிரதேச செயலகம் :- கிளிநொச்சி

வயது - 31
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை- B.A
தொழில் :- Hostel Master
பிரதேச செயலகம் :- நெடுந்தீவு

வயது - 30
சமயம் : - இந்து சமயம
கல்வித்தகைமை :- தரம் 10
தொழில் :- சாரதி
பிரதேச செயலகம் :-திருகோணமலை

வயது - 30
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - A/L
தொழில் :- சாரதி விவசாயம்
பிரதேச செயலகம் :- வவுனியா

வயது - 37
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - G.C.E O/L Geraphic Designer
தொழில் :- Own Business
ஜேர்மனி

## மணமகன் தேவை

வயது - 25
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - NVQ-04 , Oxford English Diploma
தொழில் :- முன்பள்ளி ஆசிரியர்
பிரதேச செயலகம் :- கோப்பாய்

வயது - 26
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - Civil Diploma
தொழில் :- Civil Designer
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

வயது - 37
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - Higher Diploma in Library
தொழில் :- Librarin
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

வயது - 30
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - BSC in Soft ware Engineering, Post Grad Diploma in Big Data Analytics
தொழில் :- Application Consultant
பிரதேச செயலகம் :- கொழும்பு

**இவை பற்றிய மேலதிக விபரங்களைப் பெற கீழ் உள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்**
**அகவொளி குடும்ப நல மையம் புனித பத்திரீசியார் வீதி யாழ்ப்பாணம்**
**தொலைபேசி இலக்கங்கள்**
**077 - 904 7651, 021- 222 2856, 077- 942 2970.**

# நாடாளுமன்றத் தேர்தல் .... (3ம் பக்கத் தொடர்ச்சி)

**நாடாளுமன்றத் தேர்தல்**

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நாம் - தமிழர் எப்படி வாக்களிக்கப் போகின்றோம்?

1. வீடு உடைந்து விட்டது. தந்தை செல்வநாயகம், வன்னிய சிங்கம் நாகநாதன் போன்றோரின் அரசியல் சிந்தனையில் கட்டி எழுப்பப்பட்ட வீடு சின்னாபின்னமாகி விட்டது.

2. இணக்க அரசியல் அதே வீணையில் அதே இசையை மட்டும் இசைத்து வருகிறார். அவரால் அவரைச் சுற்றி இருக்கும் ஒரு சிறு கூட்டத்திற்கு நன்மை பயக்கலாம்.

ஆனால், இந்த வீணை ஆசிரியர் முன்பு செய்தது போல அனுராவின் ஆட்சியில் இடம் எடுக்க முடியுமா? அமைச்சராக வர முடியுமா என்பது ஒரு பாரிய கேள்வி.

3. நெடுங்காலமாக சைக்கிள் யாழ்ப்பாணத்துக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையே ஓடுகின்றது. நாடாளுமன்றத்தில் ஓங்கிக் குரல் கொடுத்தாலும் இந்த சைக்கிள் தமிழருடைய பட்டி தொட்டி எல்லாம் ஓடாதது ஒரு பெரும் குறை. இனியாவது ஓடுமா என்பது கேள்விக்குறி! இவை போதாதென்று,

4. பார் லைசன்ஸ் எடுத்துக் கொடுத்த தமிழ் நாடாளுமன்றத்தினரை அடையாளங் கண்டுகொண்டோமா? வரியின்றி சொகுசு வாகனங்கள் பெற்றுக் கொண்ட தமிழ் நாடாளுமன்றத்தினரின் பட்டியலும் உண்டு.

5. சுயேட்சையாக நிற்பவர்களை என்றுமே நம்ப முடியாது! சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப இவர்கள் கட்சி மாறுவார்கள். அவர்கள் முதுகெலும்பில்லாமலே வாழக் கூடியவர்கள்! வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் பெரும்பான்மை பெறாவிடில், இந்த சுயேட்சைகள் அனுரா பக்கம் சாய்வார்களா?

தமிழ்த் தலைமைகளை இனியும் நாம் நம்ப முடியுமா? இவர்கள் தங்கள் சொத்து அனைத்தையும், பெற்ற பார் லைசன்ஸ் பற்றியும் சொகுசு வாகனங்கள் பற்றியும் தமிழ் வாக்காளர்களுக்கு வெளிப்படைத் தன்மையுடன் சொல்வார்களா? அல்லது நாமே இவர்களை அடையாளங் கண்டு தமிழ் அரசியலில் இருந்து முற்றாக விலக்கி விடுவோமா? விலக்க வேண்டுமென்பது என் கருத்து. தமிழ் அரசியல் வாதிகள் தொடர்ந்தும் தமிழ் தேசியமும், சுயநிர்ணயமும் பேசிக்கொண்டே இருப்பார்கள். இந்தியாவோ சர்வதேசமோ இவர்களைக் கணக்கில் எடுக்கமாட்டார்கள். அதில் எனக்குத் தெளிவு. பொக்குள் கொடியுடன் (மறுபக்கத்தில் இந்தக் கொடி எப்பொழுதோ வெட்டியாயிற்று) இவர்கள் ஈழத்துத் தமிழர்களை ஏமாற்றிக் கொண்டே தங்கள் தமிழ்த் தேசியத்தைப் பாடிக் கொண்டே தங்கள் இருப்புக்களைத் தக்க வைக்க முனைவார்கள். தமிழ்த் தேசியம், சுயநிர்ணயம், என்ற எங்கள் குரல் உலகில் கேட்க வேண்டும் என்ற சுலோகங்கள் புளித்துப்போய் விட்டன. வறட்சி அடைந்த சுலோகங்களாகி விட்டன.

தெற்கில் எப்படிப்பட்ட அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டாலும், இவர்கள் மாறமாட்டார்கள். புதிதாகச் சிந்திக்க மாட்டார்கள். பெட்டிக்குள் இருந்து வெளியே வந்து சிந்திக்க மாட்டார்கள். சிந்திக்கத் தெரியாது. என்னைப் பொறுத்தமட்டில், போதும் போதும் (enough is enough) இவர்களுக்கு வாக்குப் போடுவது வீணிலும் வீண். குட்டக்குட்டக் குனிபவனும் மடையன் குட்டுபவனும் மடையன்.

**சமத்துவம்**

அனுரா மட்டும் சமத்துவம் பேசவில்லை. தேசிய மக்கள் சக்தி சமத்துவம் பேசுகின்றது. இக்கட்சியின் ஒரு முக்கியமான பொறுப்பான பதவியேற்ற - பிரதமர் கலாநிதி 'ரிணி அமரசூரிய ஒரு படித்த, பண்பட்ட, பக்குவமடைந்த ஒரு தலைவியாகத் தோற்றமளிக்கின்றார்.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் புதிய அரசியல் யாப்பு உருவாக்குவதாகச் சொல்லியுள்ளார்கள்.

( தொடர்ச்சி 7ம் பக். )

*(அமலன், யாழ்ப்பாணம்)*

**கே: 2024ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் வடகிழக்கு மாகாணங்களில் தமிழர் பிரதிநிதித்துவம் எப்படி இருக்கப் போகின்றது?**

பதில்: பரிதாபமாகத்தான் இருக்கப் போகின்றது!

*(றமேஸ், யாழ்ப்பாணம்)*

**கே: நாடாளுமன்றத் தேர்தலில் வடகிழக்கு மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும்?**

ப: மக்களின் பொதுப் பணத்தைத் திருடியவர்கள், பொதுச் சொத்துக்களைக் கொள்ளையடித்தவர்கள், அதிகார துஷ்பிரயோகம் செய்தவர்கள், அநீத வழிகளில் குறிப்பாக 'பார் லைசன்ஸ்' போன்றவற்றை விற்றுச் சொத்துக் குவித்தவர்கள், அரசியல் தீர்வுக்கும் தங்கள் ஒத்துழைப்பை வழங்காதவர்கள் போன்ற அனைவரையும் நிராகரித்து, நாட்டு நலனில் உண்மையான அக்கறை கொண்டவர்களை இனங்கண்டு அப்பப் பட்டவர்களுக்கு, வடகிழக்கு மக்கள் மட்டுமல்ல நாட்டுமக்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும்.




*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கே: தமிழ்த் தேசியம் என்று எல்லோருந்தான் பேசுகின்றார்கள்! இவர்களில் உண்மையான தமிழ்த் தேசியவாதிகள் யார், பொய்யான தமிழ்த் தேசியவாதிகள் யார் என்று எப்படிக் கண்டு பிடிப்பது?**

ப: 'நல்ல கனிதரும் கெட்ட மரமுமில்லை, நச்சுக் கனிதரும் நல்ல

# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா,அமதி**

மரமுமில்லை! ஒவ்வொரு மரத்தையும் அதனதன் கனியால் அறிந்துகொள்ளலாம்!' கனியைப் பாருங்கள். அதன்பின் வாக்கைப் போடுங்கள்.

*(ரவி, முல்லைத்தீவு)*

**கே: வடகிழக்கில் தோன்றியிருக்கும் சுயேட்சைக் குழுக்கள், கட்சிகள் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

ப: அநேகமானவை, புதுமழைக்குத் தோன்றிய புற்றீசல் போன்றவை!

(ரஜனி, கிளிநொச்சி)

**கே: பழைய பழம்பெரும் தமிழ்க் கட்சிகளுக்கு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் என்ன நடக்கப் போகின்றது?**

ப: கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யு.என்.பி. கட்சிக்கு என்ன நடந்ததோ அதுவே நடக்கப் போகின்றது! அப்படி நடப்பதுதான் தகுதியும் நீதியுமானது!

## நாடாளுமன்றத் தேர்தல்....

(6ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த யாப்பில், சமத்துவம் எழுத்தில் வடிக்கப்படும். அதில், தமிழர் உரிமை மட்டுமல்ல அனைத்து மக்களின் உரிமைகளும் தெளிவாக்கப்படும். இதைக் கேட்கும்பொழுது நம்பவேண்டும் போல இருக்கின்றது. ஆனால் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவர் தமிழர்களுடன் நில உரிமை பகிரப்படமாட்டாது என்று கூறியுள்ளார். இதைக் கேட்கும்பொழுது தேசிய மக்கள் சக்தியின் சமத்துவத்தில் எங்கள் நிலம் எங்களுக்குச் சொந்தமில் லையா என்ற சந்தேகம் எழுகின்றது.

தேசிய மக்கள் சக்தி அடிப்படையாக மார்க்சிய வாதிகள் என்பதில் எமக்குச் சந்தேகமில்லை. ஆனால் அனுர குமார பதவியேற்றதும் மகாநாயக்க தேரர்களை தேடி ஓடி ஒடிச் சந்தித்து முழந்தால் படியிட்டு ஆசீர்வாதம் பெறுவதும் கைகளில் நூல் கட்டுவதையும் பார்க்கும் போது இவர்கள் இச் செயலை பௌத்த சிங்கள மக்களுக்குக் காட்டுவதற்காக செய்கி றார்களா அன்றேல் உண்மையிலேயே பௌத்த பக்தியைக் காட்டுகிறார்களா? என்று கேட்கத் தோன்றுகிறது. பௌத்தத்திற்கு முன்னுரிமையைக் கொடுப்போம் என்று சொல்கிறார்களா அவ்வாறாயின் சமயத்தில் சமத்துவம் இல்லையா.

முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறார்களா, அன்றேல் பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்கு பயந்து அவர்களைச் சமாதானப்படுத்தப் பேசுகிறார்களா என்று ஒரு சந்தேகம் எழுகின்றது.

தமிழர்களாகிய நாமும் சமத்துவம் பேசுவோம். சமத்துவத்தில் எமது உரிமைகளையும் கேட்போம். இக்கட்டத்தில், நாம் பிரிவினை பேசுவோமானால், உலகமே எங்கள் குரலை உதாசீனம் செய்யும். நாம் சுயநலன் கொண்டோர் என்று முத்திரை ஒட்டும். அண்மையில் இந்தியாவிலிருந்து வந்த வெளிஉறவு அமைச்சர் ஜெயசங்கர் அநுர குமார திசநாயக்காவையும் சில சிங்களத் தலைவர்களையும் சந்தித்துச் சென்றவர் தமிழ்த் தலைவர்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை இது எதைக் காட்டுகின்றது?

தமிழர்களின் சிந்தனையில் ஒரு பாரிய மாற்றம் அவசியம் தேவை. தமிழர் பழையன கழிய வேண்டும். புதிதாய் சிந்திக்க வேண்டும். மாற்றுச் சிந்தனை எமக்குத் தேவை. அவசியம் தேவை. சந்தர்ப்பம் ஒன்று எங்கள் கதவுகளில் தானாகவே வந்து தட்டுகின்றது. உள்ளிருந்து எமது மூடிய கதவுகளை, திறந்து விடுவோம். பாரம்பரியங்களை, அவை ஆரோக்கியமானவையோ இல்லையோ, அவற்றை இறுகப்பிடிப்பது தமிழர்களின் வழக்கம். இந்தப் பிடியிலிருந்து நாம் விடுதலை பெறவேண்டும்.

### அடிப்படைப் பூச்சு

ஜாதிக விமுக்தி பெரமுனவிலிருந்து தேசிய மக்கள் சக்தி பரிணமித்தாலும் அடிப்படையில் சிவப்பு சிவப்பு தான் அதில் தமிழர்களாகிய எங்களுக்குப் பிரச்சினையல்ல மார்க்சிய வாதிகள் ஒரு சமயத்தை முன்னிறுத்திப் பேசுவது அல்லது ஒரு சமயத்துக்குப் பயந்து பேசுவது எங்களுக்கு ஒரு சந்தேகத்தை எழுப்புகிறது. ஒரு சமயத்துக்குப் பயந்தவர்கள் பௌத்த சிங்கள பேரினவாதத்திற்கும் பயப்படுவார்களா.

அனுரா பதவிக்கு வந்த கையோடு செயற்பட ஆரம்பித்துவிட்டார். ஊழலை ஒழிப்பதற்கு முன்னுரிமை கொடுக்கின்றார். மக்கள் அவருடைய செயலை வரவேற்கிறார்கள் நாமும் வரவேற்கின்றோம். தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்றத் தேர்தலில் ஓரளவு பெரும்பான்மை பெறாவிடில், எதிர்க்கட்சிகள் கூட்டாகச் சேர்ந்து அநுராவின் கைகளைக் கட்டி விடுவார்கள் இது நாட்டிற்கு ஓர் இழப்பு. ஒரு வகையில் தமிழர்களாகிய எங்களுக்கும் இழப்பு.

இந்தக் கட்டத்தில் தமிழர்களாகிய நாம் இருதலைக்கொள்ளி எறும்பாகின்றோம். செல்லும் வழி எது?

இக் கட்டுரை எழுதிக்கொண்டிருக்கும் வேளை அனுரகுமார திசநாயக்க தமது கட்சிக் கூட்டத்தில் சொல்லியதாக, "வடக்கே தமிழ்க் கட்சிகள் பல எம்மோடு சேர்வதாக" சொல்லியிருக்கின்றார் (வலம்புரி 14.10.2024). இது உண்மையானால், யார் இந்தத் தமிழ்க் கட்சிகள்? வடகிழக்குத் தமிழ் மக்களுக்கு தங்கள் நிலைப்பாட்டை இக் கட்சிகள் வெளிப்படுத்துவார்களா? அனுர குமார சொல்லியதை ஊர்ஜிதப்படுத்துவது போல தேசிய மக்கள் கட்சிக்கு வடகிழக்கில் இங்குமங்குமாகக் கட்சி அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

### பிசாசா? ஆழ்கடலா?

ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. "between the devil and the deep sea." இதையே, பிசாசா? அல்லது ஆழ்கடலா? என்று நான் தமிழில் மொழி பெயர்த்தேன். பிசாசை நான் நன்கே தெரிந்து வைத்திருக்கின்றேன். பிசாசோடு கூடுவதில் எந்தப் பயனும் இல்லை. மறுபக்கத்தில் ஆழ்கடலில் விழுந்தாலும் ஒருவேளை எங்கள் கூட்டு முயற்சியால் அமிழ்ந்து போகாமல் வெளியே வரலாம். இப்படிப்பட்ட ஒரு நிலையில் தமிழர்கள் சுயமாகச் சிந்திக்க வேண்டும். நன்மை தீமைகளை நடுவுநிலமையோடு பார்க்க வேண்டும்.

இந்த இக்கட்டான நிலையில், நாம் துணிவோடு புதிய முடிவுகள் எடுக்கவேண்டும். இடர்வரவு (risk) எடுத்துத்தான் ஆக வேண்டும். அதுதான் தலைமைத்துவம். எங்கள் அரசியல் எதிர்காலத்தை நாங்களே முடிவுசெய்வோம். எங்களுக்கு நாங்களே தலைமைத்துவம் கொடுக்கும் காலமிது.

அண்மையில் பருத்தித்துறையில் மீனவர் சங்கம் தாமாகவே ஒன்றுகூடி தமக்கு முன்னிருக்கும் அரசியல் நிலமையை சீர்தூக்கிப் பார்த்து முடிவொன்று எடுத்ததாக நாளேடு ஒன்று பதிவு செய்தது. ஏனைய தமிழர்களும் ஏன் இதைப் பின்பற்றக் கூடாது. "ஓர் உச்ச நிலை நெருக்கடியிலிருந்து எம்மை மீட்க ஒரு சமூக விழிப்புணர்வு தேவை" என்று பௌத்த குரு திக் நாட் கான் கூறினார்.


## 10ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 19 . 03 . 1934

இறைவன் கரத்தில் 18 . 11 . 2014



**அமரர் திருமதி பேணடேற் சூசைதாசன்**

**(இளைப்பாறிய ஆசிரியை) பிறந்த இடம் சில்லாலை, கொழும்பு)**

அழியாத நினைவுகளை மனதோடு தந்துவிட்டு
இறையோடு சென்று பத்து ஆண்டுகள் பறந்தனவோ
ஆண்டுகள் எத்தனை கடந்தாலும் எங்கள் ஆழ் மனங்களின் ஆணிவேரே...
பார் புகழ நாம் வாழ பாதைகளை வகுத்து தந்த தாயே
காலமெல்லாம் நாம் நலமாய் வாழ கனவுகளை சுமந்த தாயே...
உங்களை உருக்கி எமக்காக உயிர் உள்ளவரை வாழ்ந்தீர்கள்...
எம் விழிகளில் நீர் ஓடிக் கொண்டே நினைவலைகளால்
எம் உள்ளம் வாடுதே தாயே...

உங்களோடு வாழ்ந்த காலங்கள் கண்முன்னே நிழலாகும்.
உங்கள் இனிய நினைவுகள் ஒரு போதும் எமது மூச்சிருக்கும் வரை எம்மை விட்டு அகலாது நிலைத்திருக்கும்.
உங்கள் அன்பு, பண்பு, பரிவு, பாசம் மறைந்திடுமோ!
இவற்றிற்கு ஈடு இணையில்லை.
உங்கள் வழிகாட்டல்களை மனதில் கொண்டவர்களாய் வாழ்கின்றோம்
அன்று எம்முடன் வாழ்ந்து மறைந்தீர்கள்.
இன்று எம்முடன் மறைந்தும் வாழ்கின்றீர்கள்.
எம் இதயத்தின் ஆழத்தில் என்றும் உங்கள் நீங்கா நினைவலைகளுடன்
வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்

*இவரின் ஆன்மா இளைப்பாற்றிக்காக 18-11-24 திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு புதுச் செட்டித்தெரு புனித வியாகுல மாதா ஆலயத்திலும், சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்திலும் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும்.*

**குடும்பத்தினர்** 0719904969



## 8ம் ஆண்டு நினைவு

அன்னையின் மடியில் 18 . 09 . 1948

இறைவன் கரத்தில் 18 . 11 . 2016



**அமரர் திருமதி மெற்றில்டா சோதிமலர் இராஜசிங்கம்**

**எட்டு ஆண்டுகள் எட்டாத தூரம்**
**எம்மை விட்டுப் பிரிந்து இறைநிழலில்**
**எப்போதும் ஆண்டவன் சந்நிதியில்**
**ஏற்றமுடன் வாழ வேண்டுகின்றோம்.**

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 18-11-24 திங்கட்கிழமை காலை 5.45 மணிக்கு யாழ் அடைக்கல அன்னை ஆலயத்திலும், மிருசுவில் அருள் ஆச்சிரமத்திலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும் இவருக்காக செபிக்க உங்களை வேண்டுகின்றோம்.

யாழ்ப்பாணம்.

கணவர், மகள்
மருமகன், பேரப்பிள்ளைகள்.

## மரியாயின் சேனையின் வருடாந்த வெளிவிழா



யாழ் மறைமாவட்ட மரியாவின் சேனையாரின் வருடாந்த வெளிவிழா கடந்த 12ம் திகதி முழுங்காவில் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் செபமாலைப் பேரணியுடன் ஆரம்பமானது. முழுங்காவில் செபமாலை அன்னை ஆலயத்தில் கொமிற்சிய ஆன்மீக இயக்குநர் அருட்பணி சகாயநாயகம் அவர்களின் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் கிளிநொச்சி மறைக்கோட்ட குருமுதல்வர் அருட்பணி பெனற் அவர்களும் முல்லைத்தீவு மறைக் கோட்ட கியூரியா ஆனமீக இயக்குநர் அரு தந்தை யூட் அமலதாஸ் அவர்களும் கிளிநொச்சி மறைக்கோட்ட கியூரியா ஆன்மீக இயக்குநர் ஜோண்கனிசியஸ் அவர்களும் முழுங்காவில் கியூறியா ஆன்மீக இயக்குநர் அருட்பணி தயாதீபன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் அருட்தந்தையர்களும் அருட்சகோதரிகளும் சேனையார் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

## பணி கௌரவிப்பு நிகழ்வு



கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவ கல்லூரியில் கடந்த 8 வருடங்கள் அதிபராக பணியாற்றிய அருட்தந்தை கிருபாகரன் மற்றும் அவருடன் இணைந்து பணியாற்றிய அருட்தந்தை நெவின்ஸ் யோகறாஜ் பீரிஸ் மற்றும் அருட்தந்தை ஆதர் யஸ்ரின் ஆகியோரின் பணி கௌரவிப்பு நிகழ்வு கடந்த 23ஆம் திகதி அங்கு நடைபெற்றது.

கல்லூரி அதிபர் அருட்தந்தை தயாபரன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் திருப்பலியும் தொடர்ந்து அருட்தந்தையர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம், அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள், குருமட மாணவர்களென பலரும் கலந்து கொண்டனர்.

## க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான கருத்தமர்வு



யாழ். கரித்தாஸ் கியூடெக் நிறுவனம் கரித்தாஸ் கொரியாவின் அனுசரணையில் வறிய மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கானகல்வி உதவித்திட்டத்தின் கீழ் ஒரு தொகுதி மாணவர்களுக்கு கல்வி உதவி வழங்கி வருகின்றது. இச் செயற்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான கணித பாட கருத்தமர்வு கடந்த 19ஆம் திகதி யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. நிறுவன இயக்குனர் அருட்தந்தை இயூஜின் பிரான்சிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இக்கருத்தமர்வில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி கணித பாட ஆசிரியர்களான திரு. நந்திவர்மன் மற்றும்திரு. கஜிபன் ஆகியோர் கலந்து மாணவர்களை நெறிப்படுத்தினர். இந்நிகழ்வில் 130 மாணவர்கள் பங்குபற்றி பயனடைந்தனர்.

## குழுமத்தலைவியர்களுக்கான உருவாக்கல் பயிற்சி



செபமாலைத்தாசர்சபை அருட்சகோதரிகளின் குழுமத்தலைவியர்களுக்கான உருவாக்கல் பயிற்சி கடந்த 19ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் பாண்டியன்தாழ்வு செபமாலைத்தாசர் கன்னியர் மடத்தில் வழிகாட்டி அமலமரித்தியாகிகள் சபை அருட்தந்தை ஜோசப் அலோசியஸ் றோய் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அருட்சகோதரிகளுக்கான கருத்துரைகள் இடம்பெற்றதுடன் உருவாக்கல் பயிற்சியின் இறுதி நாள் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் கலந்து சிறப்பு ஆசீரையும் வழங்கியிருந்தார்.

## பருத்தித்துறை மறைக்கோட்ட அருட்பணிச் சபைக் கூட்டம்



பருத்தித்துறை மறைக்கோட்ட அருட்பணிச்சபை கூட்டம் கடந்த 26ஆம் திகதி பருத்தித்துறை புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெற்றது. பருத்தித்துறை மறைகோட்ட முதல்வர் அருட்தந்தை கிருபாகரன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சபையின் கடந்தகால எதிர்கால திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் கலந்து யூபிலி ஆண்டு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழுமங்களை அமைப்பது தொடர்பாக கருத்துரை வழங்கினார். இந்நிகழ்வில் பருத்தித்துறை மறைக்கோட்டப் பொது நிலையினர் கழக இயக்குனர் அருட்தந்தை ஜெயறஞ்சன், அருட்தந்தையர்கள், அருட்பணிசபை அங்கத்தவர்களென 100 வரையானவர்கள் கலந்துகொண்டனர்.

## யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் உறுதிப்பூசுதல் அருட்சாதனம்



யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத் தந்தை அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் கடந்த 21ஆம் திகதி நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலைமையில் இடம்பெற்ற திருப்பலியில் 74 மாணவர்கள் உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தை பெற்றுக்கொண்டனர்

## ஆசிரியர் கலாசாலை புனித மரியன்னை சிற்றாலய வருடாந்த திருவிழா



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அமைந்துள்ளள புனித மரியன்னை சிற்றாலய வருடாந்த திருவிழா யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்தந்தை டியூக் வின்சன்ட் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 30ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது. கலாசாலை கிறிஸ்தவ மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இத்திருவிழா திருப்பலியை யாழ். அகவொளி குடும்பநல நிலைய உதவி இயக்குநர் அருட்தந்தை ஜெராட் அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார்.

## 'உயிர்வாழும் நம்பிக்கை' ஆய்வரங்கு



கண்டி அம்பிட்டிய தேசிய குருத்துவக் கல்லூரியில் முன்னெடுக்கப்பட்ட 'உயிர்வாழும் நம்பிக்கை' ஆய்வரங்கு கடந்த 31ஆம் திகதி வியாழக்கிழமை கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது."மதச்சார்பற்ற சமுதாயத்தில் மத நம்பிக்கைகளின் பொருத்தப்பாடு" என்னும் கருப்பொருளில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தொடக்கவுரையாற்றிய கண்டி மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை வலன்ஸ் மென்டிஸ் அவர்கள், இந்நாட்களில் மதச்சார்பற்ற உலகம் மதங்களுக்குள் ஊடுருவுவதால் மதங்கள் அவற்றை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்காமல் பதிலுக்கு மதச்சார்பற்ற உலகத்தினுள் ஊடுருவி நீதி, சமாதானத்துக்காக உழைத்தல், பொதுநிலையினரோடு சேர்ந்து செயற்படுதல், ஒடுக்கப்படும் வறியவரோடு துணை நிற்றல், நற்கல்வி மற்றும் நற்தொழில்நுட்பத்தை சமுதாயத்துக்குள் கொண்டு செல்லல் போன்ற விடயங்களை வினைத்திறனோடு முன்னெடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து கலாநிதி மல்லிகா ராஜரட்ணம், மற்றும் அருட்கலாநிதி போல் றொகான் ஆகியோரால் சிறப்பு உரைகள் வழங்கப்பட்டதுடன் இருபது ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுக்கட்டுரைச் சுருக்கங்களை ஐந்து வெவ்வேறு கூடங்களில் அறிக்கை செய்தனர்.இவர்களுள் யாழ். மறைமாவட்டத்திலிருந்து பங்குபற்றிய அருட்தந்தையர்கள் மூவரும், குருமட மாணவர் ஒருவரும் அடங்குவர்.

## ஆயர் தியோகுப்பிள்ளை வருடாந்த நினைவுப்பேருரை





ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின் நினைவாக யாழ். மறைமாவட்ட குருக்கள் ஒன்றியத்தால் முன்னெடுக்கப்பட்ட ஆயர் தியோகுப்பிள்ளை நினைவுப்பேருரை 14ஆம் திகதி யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட குருக்கள் ஒன்றியத் தலைவர் அருட்தந்தை ஆனந்தகுமார் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் அருட்தந்தை தேவராஜா ரவிராஜ் அவர்கள் கலந்து 'பரிசோதனைக்குழாய் கருவுருவாக்கம் (IVF) சாதக பாதக விவாதங்களின் தொகுப்பின் பின்னணியில் ஓர் ஒழுக்கவியல் பார்வை' என்ற தலைப்பில் நினைவுப்பேருரை ஆற்றினார். இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்ததுடன் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம், குருக்கள், துறவிகள் குருமட மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தாதிய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இவ் நினைவுப்பேருரை ஆயர் அவர்களின் ஞாபகமாக யாழ். மறைமாவட்ட குருக்கள் ஒன்றியத்தால் 2008 ஆம்ஆண்டுஆரம்பிக்கபட்டு வருடாந்தம் முன்னெடுக்கப் பட்டுவருவதுடன் இம்முறை நடைபெற்ற இப்பேருரை 16வது நினைவுப்பேருரை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## உயர்தர மாணவர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வுகள்



யாழ். மறைக்கல்வி நிலையத்தின் ஏற்பாட்டில் இவ்வருடம் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கிறிஸ்தவ நாகரிக பாடத்திற்கு தோற்றவுள்ள மாணவர்களுக்காக முன்னெடுக்கப்பட்ட வழிகாட்டல் செயலமர்வுகள் கடந்த 26ஆம் திகதி நடைபெற்றன. நிலைய இயக்குநர் அருட்தந்தை டியூக் வின்சன்ட் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் உதவியுடன் இடம்பெற்ற இக்கருத்தமர்வுகள் யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நிலையம், ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, பருத்தித்துறை புனித தோமையார் றோ.க பெண்கள் கல்லூரி, முழுங்காவில் அன்பகம் மற்றும் முல்லைத்தீவு மகா வித்தியாலயம் என்பவற்றில் சமகாலத்தில் நடைபெற்றன. இந்நிகழ்வில் 250 வரையான மாணவர்கள் பங்குபற்றி பயனடைந்தனர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2024ம் ஆண்டு கார்த்திகை மாதம் 3ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.